செய்தி வெளியீடு எண். 76 நாள்: 02.02.2018

**ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாப்பரம்பாக்கம் ஊராட்சியில் ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.02.2018) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

திருவள்ளூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் கடம்பத்தூர், திருத்தணி, பூண்டி, கும்மிடிப்பூண்டி மற்றும் எல்லாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு பணிகள் செயல்பட்டு வருகின்றது. இவற்றில் மண்புழு உரத் தொட்டி அமைத்தல், மாங்கன்று உள்ளிட்ட மரக்கன்றுகளை வழங்குதல், தடுப்பணைகள் கட்டுதல், பண்ணை குட்டைகள் அமைத்தல், குடிநீர் தொட்டிகள் அமைத்தல், சுய தொழில் புரிய சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல், விசைத்தெளிப்பான் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் மற்றும் பணிகள் வழங்கப்பட்டும், செயல்பட்டும் வருகிறது. நிலங்களை வைத்துள்ள விவசாய பெருமக்கள் தங்கள் வயல் வெளிகளில் பண்ணை குட்டைகளை அமைக்க இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை 90 சதவிகிதம் மானியத்துடன் ரூ. 25 ஆயிரம், தற்பொழுது 90 சதவிகிதம் மானியத்துடன் அது ரூ.50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன விவசாயிகளுக்கு இந்த மானியம் 95 சதவிகிதம் வரை வழங்கப்படுகிறது. இந்த பண்ணைக் குட்டைகள் அமைப்பது மூலமாக நிலத்தடி நீரின் அளவு உயருவது மட்டுமில்லாமல் சுற்றுப்புறங்களிலும் நிலத்தடி நீரின் அளவு அதிகரிக்கும். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் அனைவரும் பயனடைய வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

முன்னதாக பாப்பரம்பாக்கம் ஊராட்சியில் ரூ. 15 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உரத் தொட்டிகளையும், ரூ.32,500 மதிப்பிலான 650-க்கும் மேற்பட்ட மாங்கன்று நடவு செய்யப்பட்ட மாந்தோப்பையும், ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளையும், ரூ.25 ஆயிரம் சுழல் நிதி சுய உதவிக்குழுவிற்கு வழங்கப்பட்டு அமைக்கப்பட்ட மளிகை கடை, வேளாண்மை பொறியியல் துறை சார்பாக நுங்கம்பாக்கம் ஊராட்சியில் ரூ.5 இலட்சத்தில் கட்டப்பட்ட தடுப்பணையையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று பார்வையிட்டார்.

இவ்வாய்வுகளில் செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) திரு.பி.வி.கோவிந்தராஜன், நீர்வடி பகுதி மேலாண்மை உதவி செயற்பொறியாளர் திரு.சமுத்திரன், திருவள்ளூர் வட்டாட்சியர் திரு,தமிழ்செல்வன், கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருமதி.சாந்தி, வருவாய்த்துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**